விளையாட்டுப் பெட்டி

தகவல் தொடர்பு தொழில்நுட்பம்
வகுப்பு
1

AI generated image

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
2024

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

தகவல் தொடர்பு தொழில்நுட்பம் – I

Prepared by :
Kerala Infrastructure and Technology for Education [KITE]
Poojappura, Thiruvananthapuram - 695012, Kerala
For **State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695012, Kerala
First Edition : 2024
Website : www.kite.kerala.gov.in, www.scertkerala.gov.in
email : contact@kite.kerala.gov.in, scertkerala@gmail.com
Phone : 0471-2529800, 0471-2341883, Fax: 0471-2529810, 0471-2341869
Type setting : KITE
Layout : KITE
Printed at : KBPS, Kakkanad, Kochi - 30
© Department of Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே

உங்கள் நட்பு வட்டத்தில் இணைய மற்றொரு நண்பர் வந்துள்ளார்.

இந்த நண்பர் உங்களுக்கு விளையாடவும், பாடவும், படம் வரையவும் உதவுவார்.

இதனுடன், நிறைய புதிய அறிவுகளை இந்த நண்பர் உங்களுடன் பகிர்ந்து கொள்வார்.

கணினியின் மூலம் விளையாடிக் கற்றுக்கொள்ள இந்தப் புத்தகம் உங்களுக்கு உதவட்டும்.

இதனுடன் உங்களைச் சுற்றியுள்ள காட்சிகளை நேரடியாகக் கவனிக்கவும் ஒப்பிட்டுப் பார்க்கவும் முயற்ச்சி செய்வீர்களல்லவா.

வாழ்த்துக்கள்,

முனைவர். ஜெயபிரகாஷ் ஆர்.கே.

இயக்குநர்

SCERT கேரளா

TEXTBOOK COMMITTEE

CHAIRMAN

K. ANVAR SADATH
Chief Executive Officer
KITE, Thiruvananthapuram

MEMBERS

RAJESH M. P.
Headmaster, GHSS Pakkam
Kasaragode

SINDHU A.
Master Trainer, KITE, Kannur

PRADEEPKUMAR T.
Music Teacher
CHMKMHSS Kavanoor,
Malappuram

JACOB SATHYAN
AEO, Mallappally
Pathanamthitta

SHAJI C. K.
Master Trainer, KITE, Malappuram

ABHAYADEV S.
Master Trainer, KITE, Idukki

NIDHIN JOSE
Master Trainer Co-ordinator, KITE, Kottayam

UMA K. R.
LPSA, AMLPS, Morayur
Keezhmury, Malappuram

Abdul Hakkim C.P.
Software Consultant, KITE, Malappuram

P. YAHIYA
HST (Rtd.), Govt. Model HSS
Kozhikkode

HASSAINAR MANKADA
Master Trainer Co-ordinator
KITE, Malappuram

Dr. SHANAVAS K.
Master Trainer Co-ordinator
KITE, Malappuram

TAMIL TRANSLATION

DOMINIC SAVIO J., HST Tamil, SFXVHSS Parisakkal, Palakkad
PRASAD R., Master Trainer, KITE, Palakkad

GRAPHICS

IQBAL M.K.
Master Trainer, KITE, Palakkad

COVER

E. SURESH
Cartoonist, Kozhikkode

CO-ORDINATOR

MUHAMMED ASLAM A.R.
Academic Co-ordinator, KITE
Thiruvananthapuram

ACADEMIC CO-ORDINATOR

Dr. DHANYA G.
Research Officer
SCERT

உள்ளடக்கம்

1. விண்ணை பார்த்து வரைவோம் 07
2. கட்டங்களுக்குள் ஒரு வீடு 09
3. கிளிக், கிளிக் 11
4. என்னென்ன வண்ணங்கள்! 13
5. எண்ணலாம், நிறம் கொடுக்கலாம்.......................15
6. இடப்பக்கம் திரும்பு... வலப்பக்கம் திரும்பு... 17
7. வகைப்படுத்துவோம் 18
8. கண்டுபிடிக்கலாம் 20
9. நிறம் கொடுத்து விளையாடலாம் 22
10. சொல் மழை 24
11. புள்ளிகள் எத்தனை?...26
12. மொத்தம் எத்தனை?...28
13. மீதம் எத்தனை?...31
14. பத்து ஆவதற்கு எத்தனை? 34
15. நிழல் யாருடையது? 36

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

1. விண்ணை பார்த்து வரைவோம்



ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்



கிளிக் செய்து
வரையலாம்

நீல நிற வட்டம் ஒவ்வொன்றிலும் கிளிக் செய்து பார்க்கவும்.

• • •

2. கட்டங்களுக்குள் ஒரு வீடு



ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

எளிதில் வரையலாம்


தவறு நேர்ந்தால் என்னைப் பயன்படுத்தவும்
இந்த வீடு எப்படி இருக்கு?
1

அருமை. அடுத்து வேறொரு படம் வரைந்து பார்க்கவும்

3. கிளிக்.... கிளிக்....



ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

இருமுறை தட்டவா
இருமுறை கிளிக்
செய்யவா?



ஒவ்வொரு கட்டங்களிலும் (பிளாக்) தொடர்ச்சியாக இருமுறை கிளிக் செய்து மறைந்திருப்பது யார் என்று கண்டுபிடிக்கவும்.

4. என்னென்ன வண்ணங்கள்

ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

சொல்லகராதி

சொல்லகராதியை வளர்ப்போம்

நிறம்



கெயிம் திறந்துவரும்போது கேட்கப்படும் நிறத்தின் பெயரும் திரையில் தோன்றும் பாத்திரத்தில் உள்ள சாயத்தின் நிறமும் தரப்பட்டுள்ள பெயர்களையும் கவனித்து, உகந்தவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

முன்னோக்கிச் செல்ல என்ற அடையாளத்தில் கிளிக் செய்யவும்

●●●

5. எண்ணலாம்,
நிறம் கொடுக்கலாம்

நிறம் உள்ள எத்தனை வட்டங்கள் உள்ளன?



ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ் → எண்ணல் → எண்ணலாம் நிறம் கொடுக்கலாம்





கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கு பொருத்தமான முறையில் வட்டங்களில் கிளிக் செய்யவும்.

•••

6. இடப்பக்கம் திரும்பு... வலப்பக்கம் திரும்பு...

ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

இடதா வலதா?

திரையில் காண்பது இடது கையா, வலது கையா என்று கண்டுபிடிக்கவும். அதன் அடிப்படையில் கீழேயுள்ள பட்டனைக் கிளிக் செய்யவும்.

7. வகைப்படுத்துவோம்.

பழங்களும் காய்கறிகளும் கலந்து வைக்கப்பட்டுள்ளதே..
இதை வகைப்படுத்தலாமா?



எனக்கு பழங்களை கொடுக்கவும்.
எனக்கும் காய்கறிகள்...

ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ் சொல்லகராதிவகைப்படுத்தலாம் எண்கள்







8. கண்டுபிடிக்கலாம்

இது போல படத்திலுள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்.

ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

படத்தேடல்

வித்தியாசங்கள் உள்ள
எல்லா இடங்களிலும் கிளிக்
செய்ய மறவாதீர்கள்...

9. நிறம் கொடுத்து விளையாடலாம்





ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ் யுக்தி வரைபடத்திற்கு நிறம் கொடுக்கலாம்







அடுத்தடுத்து ஒரே நிறம் கொடுக்க வேண்டாமே...

10 சொல் மழை

ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

சொற்கள்

விழும் சொற்கள்



ஜிகாம்பிரஸின் மொழி ஆங்கிலமாக தேர்ந்தெடுத்தப் பின்னரே இந்த கெயிம் ஆட வேண்டும். சொற்கள் கீழே வருவதற்கு முன்னர் கீபோர்டில் அவற்றை தட்டச்சு செய்யவும்.

●●●

11. புள்ளிகள் எத்தனை?

ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

புள்ளிகளின் எண்ணிக்கை



• • •

12. மொத்தம் எத்தனை?



ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

கணக்கு

மேஜிக்மேனின்
தொப்பி +




11
OK
இங்கே கிளிக் செய்து
விடையை எழுதவும்.

13. மீதம் எத்தனை?





ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

கணக்கு

மேஜிக்மேனின்
தொப்பி -





தொப்பியில் கிளிக் செய்யும்போது நட்சத்திரங்கள் உள்ளேயும் வெளியேயும் செல்லும்.

தொப்பிக்கு அடியில் மீதம் வந்த நட்சத்திரங்களை எண்ணி பார்த்து பதில் கொடுக்கலாம்.

14. பத்து ஆவதற்கு எத்தனை?

இனி ஓணத்திற்கு எத்தனை நாட்கள் கண்டுபிடித்தீர்ளா?
இனி கெயிம் விளையாடலாம்.

ஆசிரியருக்கு	**கெயிம் திறக்க**

ஜிகாம்ப்ரிஸ்

கணக்கு

பத்து ஆவதற்கு எத்தனை?





சரியான எண்ணில் கிளிக் செய்த பின்னர் விடை வரவேண்டிய கேள்வி குறியிலும் கிளிக் செய்யவும்.



15. நிழல் யாருடையது?



ஆசிரியருக்கு	கெயிம் திறக்க

ஜிகாம்ப்ரிஸ்

குட்டிப்புதிர்



உகந்த படத்தை நிழலோடு சேர்த்து வைக்கவும்.

●●●

ஆசிரியருக்கு,

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு எஜீடெயின்மென்ட் முறையில் விளையாட்டுகள் மூலம் படிக்க உதவும் எளிய செயல்பாடுகள் இந்த பாடப்புத்தகத்தில் உள்ளன. இதற்காக, சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்வி மென்பொருளான GCompris ஐப் பயன்படுத்தி 15 செயல்பாடுகள் உள்ளன.

மொழியிலும் கணிதத்திலும் ஐ.சி.டி யின் வாய்ப்புக்கள் பயன்படுத்துவதற்கும், வரைதல், வாசிப்பு, எழுத்தறிவு, எண் உணர்வு, அடிப்படை கணிதம், நிறங்களை குறித்த அறிவு, பகுத்தறிவு ஆகியவற்றை வலுப்படுத்த உதவுகின்ற பல செயல்பாடுகள் GCompris யில் உள்ளது. மற்ற பாடங்களில் பல்வேறு சூழல்களுடன் தொடர்புடைய விளையாட்டுகள் பாடப்புத்தகத்தில் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் மேற்படி பாடங்களில் கற்றல் சாதனைகளை உறுதிப்படுத்தவும் அத்துடன் கணினிகளை பயன்படுத்துவதற்கான அடிப்படை திறன்களையும் குழந்தைகளுக்கு வழங்க முடியும்.

இதில், 1 முதல் 4 வரையிலான பாடங்கள் கணினியை அறிந்துகொள்வதற்கும், இயக்குவதற்கும் உள்ள அடிப்படை கருத்துக்கள் வழங்கும் வகையில் அமைந்துள்ளது. 'எண்ணலாம், நிறம் கொடுக்கலாம்','புள்ளிகள் எத்தனை?' 'மொத்தம் எத்தனை?' 'மீதம் எத்தனை?', 'பத்து ஆவதற்கு எத்தனை?' போன்ற பாடப்பகுதிகள் கணிதக் கருத்துகளை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் தயாரித்தவையாகும். 'விண்ணை பார்த்து வரைவோம்', 'கட்டங்களுக்குள் ஒரு வீடு', 'என்னென்ன வண்ணங்கள்' போன்ற பாடப்பகுதிகள் படம் வரைதல், நிறங்களை பற்றிய உணர்வு போன்றவற்றுடன் தொடர்பான செயல்பாடுகளாகும். மற்றும் 'வகைப்படுத்துவோம்', 'கண்டுபிடிக்கலாம்', 'நிறம் கொடுத்து விளையாடலாம்', 'நிழல் யாருடையது?' போன்ற பாடப்பகுதிகள் பகுத்தறிவு, கணக்கீட்டு சிந்தனை முதலானவற்றை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த செயல்பாடுகள் ஒவ்வொரு குழந்தைகளின் கற்றல் நிலைக்கு ஏற்ப கற்றல் அனுபவங்களை திட்டமிட உதவுகின்றன. GCompris இல் உள்ள விளையாட்டுகள் மூலம் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு ஏற்ற கற்றல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும் முடியும். குழந்தைகள் பார்த்து, கேட்டு, தொட்டு கற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்க வேண்டும். பலதரப்பட்ட விளையாட்டுகள் மூலம் அவர்களை சிந்திக்க வைத்து அறிவு மற்றும் அனுபவ உலகிற்கு அழைத்துச் செல்லும் வகையில் செயல்பாடுகளைத் திட்டமிடப்பட வேண்டும்.

இதற்கு, புத்தகத்தில் சில உதாரணங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இதில் அளிக்கப்பட்டுள்ள விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் இறுதியானவை அல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். வகுப்பறை செயல்பாடுகளில் எளிமையான, புதுமையான மற்றும் செயல் சார்ந்த வாய்ப்புகளை உட்படுத்த கவனம் செலுத்த வேண்டும். மேலும் குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய நேரனுபவத்தை வழங்கும் வாய்ப்புகளையும் தர வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பாகம் 4 அ

இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

குழந்தைகளின் உரிமைகள்

அன்பார்ந்த குழந்தைகளே,

உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400
கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***